Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தங்கவேல் (வனவர் ஓய்வு) |
| Father's Name | – | கிருஷ்ணசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 26th March 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 to A6 absent. 317 Petition filed and allowed. Counsels are present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆண்டியூரில் குடியிருந்துவருகிறேன். பொள்ளாச்சி வனச்சரகம் கோட்டூர் பிரிவில் வனவராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 21.08.2013 ம் தேதியன்று காலை 11 மணியளவில் பொள்ளாச்சி நகர மேற்கு காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையில் போலிசார் செம்மரக் கட்டைகளைப் பிடித்ததாக வனச் சரக அலுவலகத்தில் வந்து ஒப்படைத்தனர். அவர்கள் பிடித்து வைத்திருந்த 6 குற்றவாளிகளை எங்களிடம் ஒப்படைத்தனர். அவர்களைப் பார்த்தால் அடையாளம் தெரியும் (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை). அவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் விசாரணையில் ஏஎஸ்பி குடோனில் செம்மரக் கட்டைகள் இருப்பதாக தெரிவித்தனர். பின்னர் மேற்படி குடோனுக்கு வனச்சரக அலுவலர் அவர்களின் தலைமையில் பொள்ளாச்சி சரக கிராம நிர்வாக அலுவலகருடன் சென்று மேற்படி குடோனை தணிக்கை செய்தோம்.

மேற்படி குடோனை திறந்துபார்த்தபோது அதில் செம்மரக் கட்டைகள் 554 இருந்தன. அதனை அளவு எடுத்து எடை போட்டு பார்த்தபோது 10.50 டன் எடை இருந்தது. அதனை அங்கிருந்து அலுவலகத்திற்கு கொண்டுவந்து அலுவலக குடோனில் பாதுகாப்பாக வைத்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மாலை 04.00 மணியளவில் நாங்கள் குடோனுக்குச் சென்றோம். என்னுடன் வனச்சரக அலுவலகர், வனவர், வனக் காப்பாளர் மாரிமுத்து, மெய்யப்பன், கதிர்வேல் வனகாவலர் சலீம் ஆகியோர் வந்தார்கள். 10.50 டன் எடைகொண்ட செம்மரக் கட்டைகள்தான் எங்களால் கைப்பற்றப்பட்டதாகும். இதைத் தவிர வேறு செம்மரக் கட்டைகளை போலிசாரால் கைப்பற்றப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது.

12.15 மணியளவில் பிடிபொருள் மகஜர் தயார் செய்துள்ளோம் என்றால் சரிதான். அதில் பட்டை நீக்கப்பட்ட செம்மரக்கட்டைகள் 172 எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது போலிசார் எங்களிடம் ஒப்படைத்தது. நான் சம்பவ இடத்திற்குச் செல்லவில்லை என்றாலும் அலுவலகத்தில் வைத்துதான் ஸ்தல மகஜர், பிடிபொருள் மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல . வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரக் கணக்கிற்காக இவ்வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சங்கரநாராயணன் (வனவர் ஓய்வு) |
| Father's Name | – | நாராயணன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 26th March 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 to A6 absent. 317 Petition filed and allowed. Counsels are present.

## முதல் விசாரணை :

நான் தற்போது ஆனைமலையில் குடியிருந்துவருகிறேன். பொள்ளாச்சி வனச்சரகம் சேத்துமடை கிழக்குப் பிரிவில் வனவராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 21.08.2013 ம் தேதியன்று சுமார் மதியம் 1 மணியளவில் நான் பொள்ளாச்சி வனச்சரக அலுவலகம் வந்தபோது பொள்ளாச்சி நகர மேற்கு காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையில் போலிசார் செம்மரக் கட்டைகளைப் பிடித்ததாக வனச் சரக அலுவலகத்தில் வந்து ஒப்படைத்தனர். அவற்றின் எண்ணிக்கை 172 ஆகும். அதன் நீளம் மற்றும் சுற்றளவு என்னால் அளவிடப்பட்டது. தங்கவேல் வனவர் அவர்களால் எடை போடப்பட்டது. அதன் எடை 5.5 டன் ஆகும்.

திரு மாரிமுத்து வனக்காப்பாளர் அவர்கள் மேற்படி செம்மரக் கட்டைகளுக்கு வரிசை எண் கொடுத்து அலுவலக முத்திரை பதித்தார். 6 எதிரிகளை போலிசார் எங்களிடம் ஒப்படைத்தனர். அவர்களில் நவ்ஷத் என்பவர் என்னிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்தார். நான் அதனை பதிவுசெய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் நவ்ஷத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அசாஆ 18** ஆகும். மீதியுள்ள எதிரிகளில் வனச்சரக அலுவலகர் 2 எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். மாரிமுத்து வனக்காப்பாளர் 2 எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். வனவர் ஒருவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களில் 5 ல் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது. மேற்படி எதிரிகளைப் பார்த்தால் அடையாளம் தெரியும் (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை). அவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் விசாரணையில் ஏஸ்பி குடோனில் செம்மரக் கட்டைகள் இருப்பதாக தெரிவித்தனர். பின்னர் மேற்படி குடோனுக்கு வனச்சரக அலுவலர் அவர்களின் தலைமையில் தனிக் குழு அமைக்கப்பட்டது. பொள்ளாச்சி சரக கிராம நிர்வாக அலுவலகருடன் சென்று மேற்படி குடோனை தணிக்கை செய்தோம்.

மேற்படி குடோனை திறந்துபார்த்தபோது அதில் செம்மரக் கட்டைகள் 354 இருந்தன. அதனை அளவு எடுத்து எடை போட்டு பார்த்தபோது 10.50 டன் எடை இருந்தது. அவற்றின் நீள சுற்றளவு என்னால் எடுக்கப்பட்டது. எடையை வனவர் தங்கவேல் பதிவுசெய்தார். வனக்காப்பாளர் மாரிமுத்து வரிசை எண் கொடுத்தார். அதனை அங்கிருந்து அலுவலகத்திற்கு கொண்டுவந்து அலுவலக குடோனில் பாதுகாப்பாக வைத்தோம். பின்னர் மேற்படி வழக்கு விசாரணைக்கு வனச்சரக அலுவலகருக்கு உதவியாக இருந்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6 ம் எதிரி நவ்ஷாத்திடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியிருந்தோம் என்றால் சரிதான். அவர் கேரளா மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்றால் சரிதான். அவருக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது என்றால் சரிதான். அவரிடம் வாக்குமூலம் வாங்கிய போது மொழிபெயர்ப்பாளர் யாரும் இல்லை, எனக்கு மலையாளம் தெரியும். 1,2 எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் ஆந்திரா மாநிலம் சித்தூர் மாவட்டைத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது தெலுங்குமொழிதெரிந்த மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் பெற்றோமா என்றால் இல்லை, அவர்கள் தமிழ் நன்கு பேசினார்கள்.

அவர்களுக்கு தமிழ் தெரியாது என்றாலும் கையொப்பம் தெலுங்கில் இட்டுள்ளார்கள் என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானாகவே ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதி அவர்களிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. நாங்கள் 3 மணியளவில் குடோனுக்குச் சென்றோம். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.